Registered as a Newspaper

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1-50

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு ஆவணி மீ 24 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 14 (09 — 09 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 245

★ குடாநாட்டில் மீண்டும் பயங்கர நிலை உருவாகிறது

# மதகுரு மற்றும் மூவர் சுட்டுக் கொலை!

# இரவில் வீதியால் சென்ருேர் மீது குறி!!

### விசாரணை

யாழ் பாங்ஷால் வீதி ச. தோ. ச. கட்டடத்தில் தங்கி இருக்கும் திருமலை அகதிகளிடம் கொள்ளை நடத்தியதுடன் அவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தவர்கள் என்று கருதப்படும் மூவர் நேற்று அதிகாலை இளைஞர்களால் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர்.

சின்னக்கடை, நவீன சந்தை, பாங்ஷால் வீதி, இரட்சண்யசேனை, குருபாபா இல்லக் களவுகளுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இருப்பதாகவும் கருதப்படுகிறது.



துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மினிவான். [உ]

## இறந்தவர்களில் இருவர் தென்னிலங்கை வாசிகள்

— அலுவலகச் செய்தியாளர்கள்: கே.இரத்தினராஜசிங்கம், சண்.ஜேன்சன் —

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 9

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீண்டும் பயங்கர நிலை உருவாகி வருகிறது.

திங்கட்கிழமை இரவு வீதியால் சென்ற அப்பாவிகள் நால்வர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் இந்தக் கொடூரச் சம்பவம் நடந்தது

முகமூடி அணிந்த கொலைஞர்கள், தென்னிலங்கையைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுருவும் அவரது உதவியாளர்களும் சென்ற வான் மீது தாறுமாறுகச் சுட்டனர்.

மாற்று இயக்கம் ஒன்றின் அங்கத்தவர்கள் தான் வருகிறுர்கள் என்று நினைத்தே கொலைஞர் கோஷ்டியினர் வான் மீது சுட்டனர் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

குடாநாட்டில் நிலைமை சீராகிவிட்டது என நினைத்து, ''அசெம்பிளி ஒவ் கோட்'' சபையைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு தமது உதவியாளர் ஒருவருடன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். சபை அலுவல்களைக் கவனிக்கவென்று மல்லாகம் செல்லும் வழியிலேயே அவர் கொலையுண்டார்.

உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது கிறிஸ்தவ மதகுரு உட்பட நால்வர் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயம் அடைந்தனர்.

கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு நுவரெலியா ''அசெம்பிளி ஒப் கோட்'' சபையைச் சேர்ந்த சிங்களவரான ரூஹான் திஸ்ஸநாயக்கா (வயது 50). இரு குழந்தைகளுக்கு தந்தை.

கொல்லப்பட்ட மற்றைய மூவரிலும் ஒருவர் சிங்களவர். இவரது

(4 ஆம் பக்கம் பார்க்]





வெள்ளையர் கறுப்பர் சமன்பாடு உந்தளவுக்குப் போனல் இனபேதம் என்னெண்டு ஒழியிறது?!

## முகமூடி மனிதர்கள் மூதூரில் அட்டகாசம்

முகமூடி அணிந்த இரு இனம் தெரியாத நபர்கள் மூதூர் — மணற்சேனை கிராமத்துக்குள் புகுந்து ஆழ்ந்த நித்திரையிலிருந்த கணவன்—மனைவி இருவரையும் வாளால் வெட்டினர். மனைவி அதே இடத்தில் மரணமானுர். கணவன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கலைமணி (30 வயது) என்னும் பெண்மணியே ஸ்தலத்தில் இறந்தவராவார். இவரின் கணவன் மகேந்திரராசா படுகாயமுற்றுர்.

மூதூர் பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா மரண விசாரணை நடத்தி கலைமணியின் மரணம் கொலையெனத் தீர்ப்பு வழங்கினுர்.

(உ-150)

## விடுதலைப் புலிகளுக்கு வைக்கப்பட்ட குறி!

### அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், செப் 9

கிறிஸ்தவ போதகரும், அவரின் உதவியளர்களும் மானிப்பாய்-மருதனுமடம் வீதியில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், விடுதலைப் புலிகளுக்கு வைக்கப்பட்ட குறியாகும்.

—இப்படி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## உடுவில் கொலைகள் தொடர்பாக இந்திய இராணுவம் விசாரணை

யாழ்ப்பாணம், செப். 9

நேற்றுஉடுவிலில்இடம்பெற்ற மரணங்கள் தொடர்பாக விசாரணைகளை இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் 56 வெற்றுத் தோட்டாக்கள் காணப்பட்டன.

அவர்களின் வாகனம் துப்பாக்கிச் சன்னங்களால் துளைக்கப்பட்டு கண்ணுடிகளும் சேதமடைந்திருந்தன.

சம்பவம்நடந்த வேளையில் வேறு ஒரு மதகுருவும் முகமூடி நபர்களினுல் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகிறது. (இ-10)

## தமிழ் கைதிகள் உண்ணுவிரத முஸ்தீபு!

மட்டக்களப்பு, செப் 9

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் இன்று 9-ஆம் திகதிச்குள் தாம் விடுதலை செய்யப்படாவிட்டால் நாளை முதல் சாகும் வரை உண்ணுவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளார்கள்.

(ஒ-21)

## நாங்கள் ''சேர்ச்காரர்'' என்று கூறியும் சூடு நிறுத்தப்படவில்லை

### காயமடைந்தவர் கூறுகிறுர்

யாழ்ப்பாணம், செப்.9

நாங்கள் ''சேர்ச் காரர்'' (தேவாலயக்காரர்) எங்களைச் சுடாதீர்கள் என்று கத்தியும் கூட துப்பாக்கிச் சூடு நிறுத்தப்படவில்லை.

இவ்வாறு நேற்று முன்தினமிரவு உடுவில் மகளிர் கல்லூரி முன் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இறை ஊழியர் ஆர்.ஏ. ஜேப்ஸன் சொன்னுர்.

அவர் சொன்னதாவது:- நாங்கள் எட்டுப்பேர் சுதுமலைச் சந்தி வில்லியம் மேதர் ஆலயத்தின் எமது ஏழாவது ஆண்டு விழாவை முடித்துக் கொண்டு மல்லாகம் பத்மநாதன் என்னும் போதகரின் இல்லத்துக்குச் சென்றேம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் பரிமாற்றத்தில் சாதனை!

மொபுடு, செப்.8

ஒரு வெள்ளை இன இராணுவக் கட்டனுக்காக தென் ஆபிரிக்க அரசாங்கம் 133 கறுப்பு இன அங்கோல சிப்பாய்களைப் பரிமாற்றம் செய்தது.

இப்பரிமாற்றம் கடந்த திங்கள் மொஸாம்பிக் தலைநகரில் இடம்பெற்றது. (உ-எ)

### சுபநேரம்

09-09-1987
புதன் கிழமை
ஆவணி 24
சுபநேரம்:-
4.34 முதல் 6.04 வரை
ராகுகாலம்:-
12.04 முதல் 1.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### நாடாளுமன்றம் கூடியது

நேற்று நாடாளுமன்றம் கூடியது.

அப்போது நாடாளுமன்றச் சிறப்புரிமைச் சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதமர் பிரேமதாச சட்டமூலத்தைச் சமர்ப்பித்துப் பேசினுர். (இ-எ)

### தாக்கப்பட்டனர்

கிளிநொச்சி, செப். 9

பரந்தனில் கடத்திச் செல்லப்பட்ட புலிகள் இயக்க இளைஞர் மூவரையும் விடுவிக்கக் கோரி ஊர்வலம் சென்றவர்களில் இருவரை இளைஞர் கோஷ்டி ஒன்று தாக்கியதாகவும் இதுபற்றி இந்தியஇராணுவத்தினரிடம் புகார் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## நாடாளுமன்றக் குழு நேற்று மீண்டும் கூடியது

கொழும்பு, செப் 9

நேற்றுக்காலை நடந்த அரசாங்க நாடாளுமன்றக் குழுக்கூட்டத்துக்கு பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸ தலைமை வகித்தார்.

கடந்த 18ஆம் திகதி இரவேட் தாக்குதல் இடம்பெற்ற கமிட்டி அறையிலேயேநேற்றைய கூட்டமும் நடைபெற்றது.

குழுக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் இரகசியப் பொலீஸார் அறைக்குள் சென்று விசாரணை நடத்தினர்.

(உ-எ)

## ஜே. ஆர் - டிக்ஷிற் சந்தித்துப் பேச்சு

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஷிற் நேற்று ஜனுதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசினுர்.

புதுடில்லியில் அதிகாரப் பரவலாக்கல் பற்றி நடைபெற்ற பேச்சுக்களில் காணப்பட்ட முன்னேற்றம் பற்றி திரு டிக்ஷிற், ஜனுதிபதிக்கு எடுத்துரைத்தார் எனத் தெரியவருகிறது. (உ எ)

## பிரபாவைக் கொல்ல எதிர் அமைப்புகள் குழு அமைத்துள்ளனவாம்!

சென்னை, செப். 9

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைக் கொல்ல எதிர்ப் போராளி அமைப்புக்கள் குழு ஒன்றை அமைத்து உள்ளன.

புலிகள் பிரதித் தலைவர் அஜித் மாத்தையா முன் கண்டவாறு தெரிவித்தார் என்று 'இந்து' செய்தி வெளியிட்டது.

புலிகள் ஒப்படைத்த அளவுக்கு ஏனைய தமிழர் குழுக்கள் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை.

அவர்களிடம் இருந்


[4ம் பக்கம் பார்க்க]

ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள்
தேவை

நன்கு தமிழ் தெரிந்த ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. எமது நிறுவனம் மூலம் சிறந்த ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட உத்தேசித்துள்ளோம். நல்ல அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

நிர்வாகி
காந்தி தமிழ் வெளியீட்டுக் கழகம்

விளம்பர இல:- 201
மே/பா உதயன்,
தபால் பெட்டி எண்:- 23
யாழ்ப்பாணம்.



உடுவில் சம்பவத்தில் கொல்லப்பட்ட நால்வர். (உ)

Digitized by Noolaham Foundation
இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★ ★★★★
★ இன்னஞ் சிறு ★
★ விளம்பரம் ★
★★★★ ★★★★

**வகுப்புக்கள்**

புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் திறமைமிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. புலமைப்பரிசில் (G. C. E. (O/L) பரீட்சைகளுக்கு விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு ஆறு வரை விசேட பயிற்சி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. திரு. K. M. செல்வரத்தினம் அவர்களால் சகல வகுப்புக்களுக்கும் ஆங்கில பாடம் (With Grammar) சிறப்பாக கற்பிக்கப்படுகிறது. (1669)

**மணப்பந்தல்**

உயர்வேளாள ஏழில் செவ்வாயுள்ள படித்த அழகிய 27 வயது இந்துப்பெண்ணுக்கு சைவ போசன மணமகன் தேவை. தொழில் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பரதாரர்: டெய்ஸி வில்லா, ஏழாலைமேற்கு, சுன்னுகம். (1651)

**விற்பனைக்கு**

லவ்பேட்ஸ் பல நிறங்களிலும் விற்பனைக்கு உண்டு. 114, 3-ம் குறுக்குத் தெரு, மணிப்புரி, கொழும்புத்துறை. (1665)

வெளிவந்துவிட்டது. G.C.E. A/L விலங்கியல் ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும் கரப்பான்- தேரை- மனிதன் பகுதி I ஆசிரியர்: எஸ். செல்வநாயகம் பிரபலபுத்தகசாலைகளில் கிடைக்கும். ரூபா 35/- பகுதி II விரைவில் வெளிவரும். (1662)

உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை அண்மையில் 3½ பரப்பு தோட்டக் காணி சகல வசதிகளுடனும் விற்பனைக்குஉண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம் 70 C/o உதயன் யாழ்ப்பாணம். (1673)

கைதடி மானிப்பாய் வீதியிலுள்ள கமத்தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முன் ஒழுங்கையில் 4½ பரப்பு காணி வலது பக்கம் மூன்றும் துண்டு) உடன் விற்பனைக்குண்டு. 'சண் பார்மஸி அன் குரோசரி' கைதடி சந்தி, கைதடி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (1672)

வாங்கிவிட்டீர்களா! 'உலகத் தமிழர் குரல்' 4ஆவதுமாநாட்டு சிறப்பு மலர் பிரதி ஒன்று பத்து ரூபா மட்டுமே. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் 67, புகையிரத நிலையவீதி. யாழ்ப்பாணம்., ஸ்ரீவாணி ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி. யுனிவேர்சல் றேட்ஸ், திருநெல்வேலி. (1667)

**தேவை**

கிரைன்டிங் மில்லுக்கு அனுபவமுள்ளவர் உடன் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும், தங்க வசதிசெய்து தரப்படும், தேவி அரிசி ஆலை, அச்சுவேலி. (1670)


திருமலையில்

# சொந்த இடங்களுக்கு திரும்ப அகதிகள் மறுப்பு

## ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்கிறுர்கள்

யாழ்ப்பாணம், செப். 9

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சகல ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களும் அகற்றப்பட்டதன் பின்பே மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியும்

திருகோணமலை கிளப்பன் பேக் அகதிமுகாமில் உள்ள அகதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

கிளப்பன் பேக் அகதி முகாமில் தற்பொழுது ஐயாயிரத்துக்கும் அதிகமான அகதிகள் தங்கியுள்ளனர்.

இவர்கள் தம்பலாமம் நிலாவெளி, மூதூர், சம்பூர், கட்டைப்பறிச்சான், கிளிவெட்டி, பன்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இந்த முகாமில் உள்ள அகதிகளை நாளை பத்தாம் திகதிக்கு முன் வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் உள்ள சகல ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களும் அகற்றப்படும் வரை சொந்த இடங்களுக்கு திரும்புவது எமக்குப் பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும், இந்திய இராணுவ உயரதிகாரிகளுக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன. (இ-10)

மக்கள் முகம்

### பலாலி நலன்புரி சபை

காங்கேசன்துறை, செப்.9

பலாலி மக்கள் நலன் கருதி பலாலி நலன்புரிச் சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பலாலி, மயிலிட்டி இணைப்பு பிரசைகள் குழுத் தலைவர் திரு. வி. இரத்தினராஜா இச் சபையை அங்குரார்ப்பணஞ்செய்து வைத்தார்.

நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

போஷகர்கள் திரு. வி. இரத்தினராசா, அப்போஸ்தலர் ஏ. யோண் பிள்ளை. தலைவர் திரு. கே.ரீ. இராஜரத்தினம், செயலாளர் திரு. வி. தனலிங்கம், பொருளாளர் திரு. சி. வி விஜயரட்ணம், உபதலைவர் திரு. வே. செல்லத்துரை உபசெயலாளர் திரு. சி. மரியதாஸ்.

9 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. (இ-68)

## யானை தாக்கி பாலகன் நசியுண்டு மரணம்

### கிளிநொச்சி கல்மடுவில் சம்பவம்

கிளிநொச்சி, செப். 9

மரண வீட்டில் கலந்து கொண்டு விட்டு அங்கே படுக்கையில் இருந்த குடும்பம் ஒன்றை யானை தாக்கியதால் ஆறுவயதுப் பாலகன் மரணமானுர். மூன்று குழந்தைகள் காயமடைந்தன. இக் குழந்தைகளின் தாயாரின் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பரிதாப சம்பவம் கிளிநொச்சி கல்மடு பத்து ஏக்கர் திட்டம் என்னும் இடத்தில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்காகக் கல்மடு என்னும் இடத்திற்கு வந்த குடும்பம் ஒன்று அங்கு மரணவீடு முடிவடைந்ததும் நித்திரையில் இருக்கையில் யானை வீட்டைப் பிரித்து உள்ளே நுழைந்துகொண்டதாம்.

உள்ளே நுழைந்த யானை சுதாகரன் என்ற ஆறு வயதுச் சிறுவனை மிதித்துக் கொன்றது. இவரது சகோதரிகளான சிவாஜினி (9வயது) ஜெயா (7வயது) ஆகியோரைக் காயப்படுத்தியது.

## கடற்படையினரால் மீன்பிடிவெளிஇணைப்பு இயந்திரங்கள் ஒப்படைப்பு

காங்கேசன்துறை, செப். 9

கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டிருந்த மூன்று மீன்பிடி வெளி இணைப்பு இயந்திரங்களை உரியவர்களிடம் கடற்படை ஒப்படைத்தது.

மயிலிட்டிக்கரை பிரசைகள் குழுவின் உதவியுடன் காங்கேசன்துறை முகத்தில் உள்ள இந்திய அமைதிப்படையினரிடம் மயிலிட்டி திருபூர் ஒன்றியத்தைச் சேர்ந்த வ. ஜெயபாலசிங்கம், அ. பதூர். த. அருந்தவராசர ஆகிய மீனவர்கள் இது தொடர்பாக விண்ணப்பித்திருந்தனர்.

அவர்கள் கடற்படையிடம் தொடர்புகொண்டதை அடுத்து இயந்திரங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து மற்றைய மீனவர்களும் தம் இயந்திரங்களைப் பெற முயற்சி மேற்கொண்டுள்ளனர். (இ-68)

### செல்வச்சந்நிதி புனருத்தாரண வேலை ஆரம்பம்

வடமராட்சி, செப். 9

செல்வச்சந்நிதி ஆலய புனருத்தாரண வேலைகள் சிரமதான மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலயத்துக்கு பக்தர்களும் வரத் தொடங்கிவிட்டனர்.

ஆனந்தா ஆச்சிரமத் திருத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் அன்னதானத் திருப்பணியும் ஆரம்பமாகிவிட்டது. (ஒ-160)

### பாடசாலைக்கு அன்பளிப்பு

குருநகர், செப் 9

யாழ் - நாச்சிமார் கோவிலடி பெரியபுலம் மகாவித்தியாலயத்திற்கு சிவலிங்கப் புளியடி எம். ஜி. எம் நிறுவனத்தினர் ஏழாயிரம் ரூபா பெறுமதியான வாங்குகள், மேசைகளை அன்பளிப்பாக வழங்கி உள்ளனர்.

தொழிலதிபர் பரராஜசிங்கம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான நான்கு வாங்கு இணை மேசைகளையும், ஒரு வெற்றிப் பீடத்தையும் செய்து மேற்படி மகா வித்தியாலயத்திற்கு வழங்கியுள்ளார். (ஒ-51)

### "முத்தமிழ் வித்தகன்"

மானிப்பாய்-செப். 9

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயத்தில் இவ்வருடம் நடைபெற்ற உற்சவ காலங்களில் தொடர்ச்சியாக சமயச் சொற்பொழிவுகள் நடத்திய செட்டிகுளம் மகா வித்தியாலய ஆசிரியரான கதாகானமணி செ. குணபாலசிங்கத்துக்கு "முத்தமிழ் வித்தகன்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. (இ 90)

## செய்திக்கொத்து

### நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 9

திருவள்ளுவர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினுல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தைத் தெரிவு செய்ய துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டதையிட்டு எமது சங்கம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் நன்றி தெரிவிக்கிறது. (ஒ)

### இடமாற்றம்

சாவேகச்சேரி, செப். 9

கடந்த 12 வருடங்களாக ஓமந்தை வேச்சன் குளம் அ. த. க. பாடசாலையில் அதிபராக இருந்த திரு. க. இளையதம்பி இம்மாதம் முதல் கைதடி நுணுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-31)

### மென்பந்து கிரிக்கெட்

காங்கேசன்துறை, செப்.9

இணுவில் கலை ஒளி மன்றத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

இதில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் நாளை 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளன. (இ-68)


# பிரயாண ஒழுங்குகள்

## ★ குவைத் ★

✶ பின்வருவோருக்கான இறுதி நேர் முகப் பரீட்சை (Final Selection) கீழ் வரும் திகதிகளில் நடக்க இருப்பதால் யாபேரும் உடனே வந்து தங்களுக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

11-09-1987 முதல் 14-09-1987 வரை நேர்முகப் பரீட்சை நடைபெறும்

- LABOURERS
- H. V. DRIVERS
- H. E. OPERATOR
- H. E MECHANIC
  (Vehicle Repair Mechanic)
  (Engine Repair Mechanic)
- WELDERS
- ELECTRICIANS
- Leath Mechanic Operator
- MECHANIC HELPERS
- COOKS
- ASST-COOKS

★ இன்று 09 - 09 - 1987 இல் இங்கிருந்து செல்ல இருப்பதால் யாபேரும் உடனே தொடர்பு கொள்ளவும்

✶ மேலும் Labourers தேவையாக இருப்பதால் 20 வயதுக்குமேற்பட்ட தேகாரோக்கியமுள்ள யாபேரும் 09-09-1987க்குப் பிந்தாமல் பின் வரும் ஆவணங்களுடன் வரவும்

✶ PASS PORT
✶ Pass port Photo Copy
✶ Service Certificate

★ PHOTO P. P. SIZE 10
★ சம்பளம்: 36 K.D.
★ கால எல்லை 4 வருடம்
★ உணவு, இருப்பிடவசதி, வைத்தியவசதி யாவும் இலவசம்

Head Office
**Construction & Development Company Ltd.**
37 S. DE. S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.

தொடர்பு:
V. P Balasubramaniam
C/o N. V- Ponnuthurai
School Lane, Kondavil West, Kondavil.


# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### இன்று கவியரங்கம்

யாழ்ப்பாணம், செப். 9

ஊரெழு மீனுட்சியம்பாள் ஆலய மகோற்சவ இலக்கியவிழாவில் இன்று 'வல்லமை தந்திடுவாள்' எனும் பொருளில் கவி அரங்கம் நடைபெறும். முருக வே. பரமநாதன் தலைமை வகிப்பார். (ஒ-கு)

### யாழ் ரயில் நிலையத்தில் இந்தியஇராணுவம்

யாழ்ப்பாணம், செப், 9

யாழ் ரயில் நிலையத்தில் இந்திய இராணுவத்தினர் ஓர் அறையில் தங்கியுள்ளனர்.

திங்கள் ரயில் நிலையத்திற்குச் சென்றவர்களை அவர்கள் நோட்டம் விட்டபடி இருந்தனர். (ஒ)

## அசாமில் ஒரு நீதி; இங்கு இன்னெரு நீதியா?

### காசி ஆனந்தன் கேட்கிறுர்

பலாலி, செப். 9

அசாமில் ஒரு நீதி; இங்கு இன்னெரு நீதியா? அசாமில் அத்துமீறிக் குடியேறிய வங்காளிகளை எதிர்த்து அசாம் போராளிகள் கிளர்ச்சி செய்தபோது அங்கு நடுநிலைமையுடன் நடந்து கொண்டார் பிரதமர் ராஜீவ் காந்தி.

அசாமில் குடியேறிய வங்காளிகளுக்கு அங்கு வாக்களிக்க உரிமை மறுக்கப்பட வேண்டும் என்ற போராளிகளின் கோரிக்கையை அவர் ஏற்று ஒப்பந்தம் கூடச் செய்தார்.

ஆனுல் இலங்கையைப் பொறுத்தவரையில் இழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட ரீதியில் நடைபெறும் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டுமென்ற தமிழ் மக்களின் கோரிக்கையை இன்னமும் கவனிக்கப்படாது இருப்பது சிங்களப் பேரினவாதிகளுக்கு ஊக்கமளிப்பதுபோலவே உள்ளது.

நேற்று முன் தினம் பலாலி இந்திய இராணுவ முகாமின் தலைமை அலுவலகமான பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் மக்களின் வழிமறிப்புப் போராட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றிய கவிஞர் காசி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

காசி ஆனந்தன் மேலும் பேசியதாவது:

அண்மையில் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்த இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற் சிங்களக் குடியேற்றத்தைப் பற்றித் தெரிவிக்கையில் குடியேற்றத்தைத் தடுக்க ஸ்ரீலங்கா படைகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்தார். இதனைப் பார்த்து நாம் அதிர்ச்சி அடைந்தோம்.

மில்லர், பொன்னம்மான், 12 வயதுப் போராளி ரோசான் போன்றவர்களின் தியாகத்தின் பின்புகூட தியாகத்தின் புனிதத்தை உணர்ந்துகொள்ள முடியாதவர்கள் [illegible] அவர்களைத் துரோகிகளாக நாம் இனம் காணும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

இப்படி அவர் கூறினுர்.

திரு. திலகர் பேசிய போது இடைக்கால அரசு தோற்றுவிப்பதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்து பின்பு இடைக்கால நிர்வாக சபையாக மாறியது. தற்போது இடைக்கால ஆலோசனைச் சபையாக அது மாற்றம் பெற்றுள்ளது.

அச்சபைக்குரிய 15 அங்கத்தவர்களில் 5 பேர் மாத்திரமே புலிகளின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படவிருப்பதாக அண்மையப் பேச்சுவார்த்தைகளின் முடிவு எமக்குத் தெரிவிக்கப்பட்டது

இந்நிலையில் நாம் அதிகாரமற்ற இந்த இடைக்கால நிர்வாக சபையில் பங்குபற்றுவதா என்பதை மீள்பரிசிலனை செய்ய வேண்டியதேவை வந்துவிட்டது என்றுர்.

பொதுமக்களால் கையளிக்கப்பட்ட மகஜரைப் பெற்று இந்திய சமாதானப் பாதுகாப்புப் படையினர் சார்பில் உரையாற்றினுர் மேஜர் பெரியசாமி. (இ-119)


கலர் பிலிம்
PROCESSING & PRINTING
செய்ய சிறந்த ஸ்தாபனம்
மாதாந்தம் 5 அதிஷ்டசாலிகட்கு கலர் பிலிம் சுருள் இனம்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இந்த உடலானது கடவுளின் ஆலயம். ஆதலால் அதை உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டும்.

— சுவாமி சிவானந்தர்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 392/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
09.9.1987 உ.பெ.இல: - 83


## கசிப்பு ஒழிப்பு!

கசிப்பு உற்பத்தியினால் பல சமூக அபிவிருத்தித் திட்டங்களைக் கைவிட வேண்டிய நிலை உருவாகி இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பரிஷ் தெங்கு - பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. யோ. செபஸ்தியாம்பிள்ளை கசிப்பு உற்பத்தியினாலும், விற்பனையாலும் ஏற்படும் ஆபத்துக்களை அண்மையில் விவரித்திருக்கிறார்.

தனி மனிதனை மட்டுமன்றி சமூகத்தையே அழித்தொழிக்கும் கொடும் அரக்கன் மது. அதிலும் கொடியது கசிப்பு என்னும் ஆட்கொல்லி.

எல்லா மதுவகைகளும் எரிசாராயத்தின் மறுவடிவங்களே. ஆனால் கசிப்போ நஞ்சின் மறுவடிவம் என்று சொல்லலாம். மனிதனின் உடலைக் குறுகிய காலத்தில் எரித்துப் பொசுக்கும் தன்மை வாய்ந்தது கசிப்பு. சட்டவிரோதமாக அது உற்பத்தி செய்யப்படுவதால் உடலைக் கெடுக்கும் பல ஒவ்வாத இரசாயனப் பொருள்கள் அதில் சேர்க்கப்படுகின்றன.

கசிப்புக் குடிப்பவர்கள் குறுகிய காலத்தில் நோயாளிகள் ஆகிவிடுகின்றார்கள். அதனால்அவர்களது குடும்ப வருமானம் அற்றுப் போகிறது. இயன்றவரை உழைத்தாலும் உழைப்பில் முக்கால்வாசியும் கசிப்புக்கே போய்விடுகிறது. விளைவு: அவரது உழைப்பில் தங்கியிருக்கும் குடும்பம் பட்டினியை எதிர்நோக்க வேண்டி உள்ளது. குழந்தைகள் போதிய உணவின்றி ஊட்டக்குறைவு நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர். முடிவில் முழுக்குடும்பமுமே நோய்காரக் குடும்பமாகி விடுகிறது.

உதாரணத்துக்கு ஒரு கிராமத்தில் பத்துக் கசிப்புக் குடிப்போர் இருந்தால் போதும், அவர்களின் குடும்பங்கள் — சராசரி ஐம்பது பேர்— நோயாளிகள் ஆகிறார்கள்.

இப்போது கிராமத்தில் பத்துப் பேர் மட்டுமா கசிப்புக் குடிக்கிறார்கள்? ஆகக் குறைந்தது நூறு என்று கணக்குப் போட்டால் ...? கிராமத்தின் நிலை என்னவது? ஒவ்வொரு கிராமத்திலும் இதே நிலை உருவாகினால்...? தமிழ்ச் சமூகம் அழிந்து போவதற்கு யுத்தமும் தேவையில்லை: ஆயுதங்களும் தேவையில்லை.

கசிப்பு அருந்துபவன் கொலை, கொள்ளை போன்ற பலவிதமான சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகிறான்.

கசிப்பு ஒரு சமூகவிரோதி. அதனை உற்பத்தி செய்பவர்களும் சமூக விரோதிகள். அதனை அருந்துபவர்கள் இரட்டிப்புச் சமூக விரோதிகள்.

கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதால்தான் கசிப்பு அருந்துபவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அதன் விளைவாகச் சமூகத்திலே பல சமூக விரோதிகள் உருவாகிறார்கள் சமூகத்துக்குப் பாரமாக மாறுபவர்களும் இருக்கிறார்கள்.

எனவே கசிப்பு உற்பத்தி செய்வோரைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது தான் முதலில் செய்யப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கை.

கசிப்பு என்னும் சமூகவிரோதியை உற்பத்தி செய்து, அந்தச் சமூகவிரோதியின் மூலம் மேலும் பல நடமாடும் சமூகவிரோதிகளை உருவாக்கி, அவர்கள் ஊடாக சமூகத்தைப் பாதிக்கவல்ல சமூகவிரோதச் செயல்களைச் செய்விக்கும் முதற்குற்றவாளிகள் கசிப்பு உற்பத்தியாளரே.

போரிலும் கொடிய கசிப்பை ஒழிப்பதற்கான பல திட்டங்களை வகுத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தீவிர பிரசாரம் செய்து வந்தனர். கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபடும் பலரைத் தண்டித்தும் வந்தனர். அதன் விளைவாக கசிப்புத் தொல்லை குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருந்தது.

மீண்டும் அது தலையெடுப்பதாகச் செய்திகள் வருகின்றன. அதற்கு இடங்கொடுக்காது கண்காணிப்பது சமூகத்தில் பற்றுள்ளோரது கடமையாகும். பிரசைகள் குழுக்கள், இளைஞர் மன்றங்கள், தெங்கு - பனம்பொருள் உற்பத்திச் சங்கங்கள் இதில் அக்கறை காட்டலாம். கிராமம் தோறும் கசிப்பு ஒழிப்பு மன்றங்கள் உருவாக்கப்பட்டு, கசிப்பு உற்பத்தியைத் தடுக்க உழைப்பது மேலும் பயன் தரும்.

## தரத்திற்கேற்ப வேலைவாய்ப்பு

சகல இளைஞர்களுக்கும் அவர்களது தரத்திற்கேற்ப வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நிஸ்கோ கடன் உதவி, வங்கிக் கடன் இவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும். வடபகுதி புனரமைப்பு வேலைகளில் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இவ்வாறு இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் நாயகம் சரித்த ரத்வத்தை தெரிவித்தார்.

சுவிஸ் நாட்டு உதவிகள் கிடைக்கப்பெறலாம் வடக்கு, கிழக்கில் பல புதிய பயிற்சிகளை ஆரம்பித்து இளைஞர், யுவதிகளை பயிற்சியில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார்.) (ஓ-76

கிழக்கு ஜேர்மன் அதிபர் கூறுகிறார்

# இரு ஜேர்மனிகளும் இணைய முடியாது

பொன், செப். 8

இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றாக இணைய முடியாது. ஒன்றாகவேண்டும் என்று எண்ணுவது உண்மை நிலைக்கு முரணானது.

### சோஷலிச முதலாளித்துவம் நீரும் நெருப்பும் போன்றவை

சோஷலிசமும் முதலாளித்துவமும் 'நீரும் நெருப்பும்' போன்றவை.

இப்படி கிழக்கு ஜேர்மன் அதிபர் எரிக் ஹொனேகர் தெரிவித்தார்.

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு மேற்கு ஜேர்மனி வந்த திரு. ஹொனேக்கருக்கு மேற்கு ஜேர்மன் பிரதமர் கோல் திங்கள் இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்துக் கௌரவித்தார்.

அதில் பேசுகையில் தான் கிழக்கு ஜேர்மன் அதிபர், இரண்டு ஜேர்மனிகளையும் இணைக்கும் கோரிக்கையை நிராகரித்தார்.

மேற்கு ஜேர்மன் அதிபர் தனது உரையில், பேர்லின் சுவரைத் தாண்டி மேற்குப் பகுதிக்குள் நுழையும் கிழக்கு ஜேர்மனியர்களைச் சுடும் உத்தரவைக் கண்டித்தார்.

''இந்த உத்தரவை கிழக்கு ஜேர்மன் ரத்துச் செய்ய வேண்டும். பேர்லின் சுவர் அகற்றப்பட வேண்டும். இரண்டுஜேர்மனிகளும் ஒன்றாக வேண்டும்'' — இப்படி மேற்கு ஜேர்மன் அதிபர் தெரிவித்தார்

இதுபற்றிக் கிழக்கு ஜேர்மன் அதிபர்நேரிடையாகப் பதிலளிக்கவில்லை

இந்த நிகழ்ச்சியைக் கிழக்கு ஜேர்மன் டெலிவிஷன் நேரடியாக ஒளி பரப்பியது

1961இல் பேர்லின் சுவர் கட்டப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை இச்சுவரைத் தாண்டிய கிழக்கு ஜேர்மன் பிரசைகள் 188பேர் கிழக்கு ஜேர்மன் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

## இறந்தோர் எண்ணிக்கை 45 ஆக உயர்வு

இஸ்ரேல் விமானத் தாக்குதலில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்தது.

இந்த ஆண்டில் தென் லெபனானில் உள்ள பலஸ்தீன முகாம்கள் மீது நடத்தப்பட்ட 22ஆவது விமானத் தாக்குதல் இதுவாகும்.

இத் தாக்குதலில் யாஸிர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை இயக்க முகாம் ஒன்றும் அபுநிதால்பிரிவு முகாம் ஒன்றும் நிர்மூலமாக்கப் பட்டன என்று இஸ்ரவேல் அறிவித்துள்ளது. (இ-எ)

## இ. காங்கிரஸ் காரியக் கமிட்டி: பெரும் மாற்றம்

இந்திரா காங்கிரஸ் காரியக்கமிட்டி பெரிய அளவில் நேற்று கட்சித் தலைவர் ராஜீவ்காந்தியினால் புனரமைக்கப்பட்டது.

பொதுச் செயலாளர் ஜி. கருப்பையா மூப்பனார் நீங்கலாக கட்சியின் ஏனைய செயலாளர்கள் அனைவரும் மாற்றப்பட்டனர்.

அவர்களின் இடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்பட்டனர்.

கட்சிப்பணிக்காக அமைச்சர் பதவியைத் துறந்த ஜனாப் குலாம் நபி ஆஸாத் ஒரு பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

ஜனாப் ஆஸாத்தின் ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி வெங்கட்ராமன் நேற்று ஏற்றுக் கொண்டார். (இ-எ)

## இலங்கை - இந்திய விமான சேவை

புதுடில்லி செப் 8.

புதுடில்லி -கொழும்பு, பலாலி - திருச்சி ஆகிய இடங்களுக்கு இடையே நேரடி விமானச் சேவையை நடத்த இந்தியா தயாராக இருக்கின்றது.

இப்படி இந்திய நிதி அமைச்சர் என். டி. திவாரி புதுடில்லியில் தெரிவித்தார்.

# இரண்டு மாதங்களில் துருக்கியில் தேர்தல்

அங்காரா, செப். 8

துருக்கியில் இரண்டு மாதங்களில் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

பெரும்பாலும் நவம்பர் மாதத்தில் இத்தேர்தல் நடைபெறும் என்று துருக்கிப் பிரதமர் கடந்த ஞாயிறு அறிவித்தார்.

இதனிடையில் தடைவிதிக்கப்பட்ட 100 அரசியல் தலைவர்களை மீண்டும் அரசியலில் பங்குபற்ற அனுமதிப்பதா என்பதை அறிந்துகொள்ளும் சர்வஜனவாக்கெடுப்பு ஒன்று துருக்கியில் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

சுமார் 25 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்தனர்.

சர்வஜனவாக்கெடுப்பின் முடிவு எப்படி இருந்தாலும் நவம்பரில் தேர்தல் நடத்தப்படும் என்று பிரதமர் வலியுறுத்தி இருக்கின்றார் (இ-எ)

**வெளி உலகில்**

## அணிசேரா இயக்கத்தில் சேரவிருப்பம்

சிட்னி செப் 8.

அணிசேரா இயக்கத்தில் சேரப் போவதாக தென் பசுபிக் தீவுகளில் ஒன்றான பப்புவ நியூகினி அறிவித்து இருக்கின்றது.

பப்புவ நியூகினி சுதந்திர வெளியுறவுக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்து வருவதாக அதில் வெளியுறவு அமைச்சர் அருறு மாத்தியாபே அறிவித்தார்.

''வல்லரசுகளின் போட்டியை பப்புவ நியூகினி எதிர்க்கின்றது. மேற்கு, கிழக்கு வல்லரசுகளின் கையாளாக எமது நாடு இருக்காது- இப்படி பதில் அமைச்சர் சொன்னார். (இ- எ)

## ரொனி வெங்கட்ராமனை சந்தித்தார்

புதுடில்லி, செப். 8

இலங்கை நிதி அமைச்சர் ரொனிடி மெல் ஜனாதிபதி வெங்கடராமனை அவரின் மாளிகைக்குச் சென்று சந்தித்துப் பேசினார்.

இது ஒரு மரியாதைச் சந்திப்பாக அமைந்தது.

# லலித் அத்துலத்துக்கு ஏற்பட்ட மரண வேதனை

கிரனேட்டுக்கள் வெடித்தன. புகை பரவியது. பயந்தவர்கள் பாய்ந்து சென்று விட்டனர். எங்கும் ஒரேரத்த மயம்.

என்னால் ஓட முடியவில்லை. ஏதாவது இடம் பெறும் வரை நான் காத்து இருக்கவேண்டியதாயிற்று.

இரத்தம் படிந்த உடுப்புக்களை நான்

> அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பிய தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தான் பட்ட மரண வேதனையைக் கட்டுரை ஒன்றில் விவரித்து இருக்கின்றார்.
>
> இங்கு அதன் முதலாவது பகுதி பிரசுரமாகின்றது.

அணிந்திருந்தேன்.

நிலத்தில் கிடந்தேன். என்னால் அசைய முடியாது என்பதை விரைவில் உணர்ந்தேன்.

சப்பாத்துக்கள் என் கால்களை விட்டு நீங்கவில்லை. அவற்றினால் என்னைத் தூக்கிச்செல்ல முடியவில்லை

ஒரே சிந்தனை, யாரோ 'இங்கே லலித்' என்று சொல்வது என் காதில் விழும் வரை.

சொன்னவரை என்னால் அடையாளம் காண முடியவில்லை. ஆனால் அவரின் குரல் மகேந்திராவுடையது என்று அடையாளம் கண்டேன்.

எனது கன்னத்தைப் பலமாக அவர் தட்டினார். சுய நினைவைத் திருப்பவே அவர் அப்படித் தட்டி முயற்சித்தார்.

நான் சுய நினைவுடன் இருப்பதாக என்னால் அவருக்குச் சொல்ல முடியவில்லை. அவர் ஏனையோரை அழைத்தார்.

மெரில், வீரவன்னி, ரஞ்சித் ஆகியோரின் குரல்களை என்னால்நினைவு படுத்த முடிகிறது. குரலிலும் பார்க்க நந்தலாலின் பருமனான பிரசன்னத்தை ஞாபகப்படுத்த முடிகின்றது.

செய்ய வேண்டிய பல விஷயங்களை அவர்களுக்குச் சொல்ல நினைத்தேன். ஆனால் என்னால் ஒன்றுமே செய்ய முடியாத நிலை.

எனது எண்ணங்களைப் பேச்சாக மாற்றக்கூடிய சக்தி என்னிடம் போதுமானதாக இல்லை.

ஆனால் அவர்கள் சரியானதைச் செய்தார்கள்.

மூன்று கதவுகள் உள்ள வழியாக என்னைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள், முதலில் கமிட்டி அறைக்கு வெளியில் கொண்டு போனார்கள் நடைபாதைக்குக் கொண்டு சென்றார்கள். பின்னர் உறுப்பினர்கள் 'பிரவேசிக்கும்' வழிக்குக் கொண்டு சென்றனர்.

எப்படியோ அச்சமயத்தில் 'பிரவேசம்' என்ற வார்த்தை என் மனக்கண்ணுக்கு 'வெளியேற்றம்' என்று தெரிந்தது.

நான் நல்லாகத் தான் இருக்கின்றேன் என்று என்னைச் சுற்றி இருந்தவர்கள் உறுதியாகச் சொன்னார்கள். ஆனால் நான் நாடாளுமன்றத்தில் இருந்து 'வெளியேற்றப்படுகின்றேன்' என்பது பற்றி அறிந்து கொள்ளவே அரைமயக்கத்தில் இருந்த எனது அறிவு விரும்பியது.

இந்த விஷயம் என் மனதைக் குடைந்தது. அவர்களால் இதற்கு மறுமொழியைத் தேட முடியவில்லை; ஆனால் பொதுவான அசௌகரியம் தான் அதிகரித்து வந்தது.

**காரினுள்**

காரினுள் ரஞ்சித் அன்பை வாரி வழங்கினார். அந்த அன்பு நான் 40 ஆண்டுகளாக அனுபவித்த ஒன்று.

''நீங்கள் சரியாக இருக்கின்றீர்கள்''— இப்படி அவர் உறுதி கூறிக் கொண்டே வந்தார்.

முதல் தடவையாக அதை நான் நம்பினேன்.

நாம் போய்க்கொண்டிருந்த வழி நெடுக அவர் உற்சாக மூட்டிக் கொண்டே வந்தார், [illegible] உற்சாகமூட்டுவது [illegible]

அவர் உற்சாகமூட்ட, உண்மையிலேயே அபாயம் உண்டு என்பதை நான் உணர முடிந்தது.

அவர் அதிகமாக திரும்பத்திரும்பச் சொல்கின்றார் என்று நான் எண்ணினேன்.

நான் சரியாகத்தான் இருக்கின்றேன் என்று கூறி அவரை உற்சாகப் படுத்த வேண்டும் என்று நான் நினைத்தேன்.

கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அப்போது ஒன்று என் மனதில் உதயமானது. ''முடிவு தவிர்க்க முடியாதது; அதுநெருங்கி விட்டது அதுவிரைவில். அதற்கு நான் தயாராக வேண்டும்''— இதுதன் என் மனதில் உதயமானது.

ஆச்சரியகரமாக,பயம் இல்லை

முதல் கவலை என் நெருங்கியவர்களான குழந்தை, மனைவி, மருமகன், மருமகள், சகோதரர், சகோதரி, நெருங்கிய நண்பர்கள்

யாருக்கு உதவ வேண்டுமோ, அவர்களுக்குப் போதுமான அளவுஉதவியிருக்கிறேனா? யாரையும் மறந்து விட்டேனோ?

என்னால் செய்ய முடிந்தது எல்லாம் செய்து விட்டேன் இப்படி நான் உடனே நினைத்துக் கொண்டேன். விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் அப்படிச் செல்வது வேதனையாக இல்லை.

என்னுடன் தவறாக நடந்து கொண்டவர்கள் பற்றி நான் பின்னர் நினைத்துக்கொண்டேன்.

இரண்டொருவர் என் நினைவுக்கு வந்தனர் எல்லாரையும் என்னால் நினைக்க முடியவில்லை. உடனே நான் அவர்களை மன்னித்து விட்டேன்; என் மனதில் இருந்து பின்னர்அவர்களைஅகற்றி விட்டேன்.

நான் யாருக்குத்தவறு செய்தேனோ அவர்கள் பற்றி நான் நினைத்துக் கொண்டேன்.

திட்டவட்டமாக யாரையும் நான் நினைக்க முடியவில்லை; அப்படி யாரும் இருந்தால் அவர்கள் என்னை மன்னித்து விடுவார்கள் என்று நம் [illegible]

(2 ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

**குறள்:**

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்

களைகட் டதனொடு நேர்.

**பொருள்:**

கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும்.

# கிருத யுகத்தில் பிரகலாதன் கலியுகத்தில் ஸ்ரீ ராகவேந்திரர்

'தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் போதெல்லாம் நான் பூமியில் தோற்றுவேன்' என ஸ்ரீமந் நாராயணர் கீதையில் கூறியுள்ளார். பூஜ்ய ஸ்ரீ ராகவேந்திர

> நல்லூர் கோவில் வீதியில் இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு பூஜ்ய ஸ்ரீ— ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவன பிரவேச விழா நடைபெறுகின்றது. அதையொட்டி இக்கட்டுரை இன்று பிரசுரமாகின்றது.

சுவாமிகளும் தெய்வீக உண்மையை நிலைநாட்ட பூமியின்கண் ஜெனனமாயினார்

வெங்கண்ண பட்டர் இதுதான் ராகவேந்திர சுவாமிகளின் பூர்வாசிரமப் பெயர் பகதி யோகத்தின் அடிப்படையில் துவைத சித்தாந்தத்தை நிறுவிய ஸ்ரீமத்வர் வழிவந்த ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர்தான் சுவா

**இராஜையா ஸ்ரீதரன்**

மிகளின் ஆசான்

ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் காத்[illegible] ளாய சண்ணபிரான் சிருஷ்டிய [illegible] பிரகலாதன் அவதாரம்

சுவாமிகள் உறங்கிக் கொண்டிருக்கும் போது சரஸ்வதி தேவி வந்து இவரை ஆசீர்வதித்து. ''மகனே! ஆச்சிரம வாழ்க்கையை ஏற்றுக் கொள் உனது பிருந்தாவன பிரவேசம் மாஞ்சாலி கிராமத்தில் அமைய வேண்டும். நீ கிருதயுகத்தில் பிரகலாதன். மறு பிறவியில் வியாசராஜ தீர்த்தர் கலியுகத்தில் ராகவேந்திரர்'' என்று கூறி மறைந்தார்.

தேவியின் கூற்றுப்படி ஸ்ரீ ராகவேந்திரர் பீடாதிபதியானார். தென்னிந்தியாவில் மாஞ்சாலிக் கிராமத்தில் ஸ்ரீ இராமபிரான் தன் [illegible] தர்களுக்கு உபதேசஞ் செய்யும் போது, அவர் அமர்ந்திருந்த கல்லையே அத்திவாரமாக அமைத்துக் கொண்டார்.

திக்விஜயத்தின் போது சாதியால ஒதுக்கப்படவில்லை, அந்தஸ்தால் அடக்கப்படவில்லை. பார்ப்போமே இவரது சக்தியை என்று ஏளனமாய் எண்ணிய அரசர் தட்டு ஒன்றில் மாமிசத்துண்டுகளை மூடி வைத்து இவருக்குக் காணிக்கையாக அளித்தார் கனிவாகப் பேசி மலர்களாக மாற்றினார் [illegible]வான். அது கண்ட [illegible], சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி,

உங்கள் கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஆச்சிரமம் அமைக்கத் தேவையான நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறி அடிபணிந்தான்

[illegible] பிரபல கார் தயாரிப்பு நிறுவனம் ஒன்றுஉண்டு அந்த நிறுவனத்தினது உரிமையாளரின் மனைவி வோல்காஸ் மெக்க ஏராளமான செல்வமிருந்தும் மனநோயினால் பீடிக்கப்பட்டு வருந்தினர் அச்சமயம் இந்தியத் தொழிலதிபர் ஒருவர், 'உங்கள் நோய் எதுவானாலும் மந்த்ராலயம் செல்லுங்கள். நிச்சயம் விடிவு உண்டு' என்று கூறவே அவர் மந்த்ராலயம் வந்தார் [illegible] துங்கபத்திராவில் நீராடி பகவான் நாமஜெபம் செய்தார். பனம் தளராமல் ஜெபித்து வலம் வரும்போது ஒரு முதியவர் சாஷாயம் அணிந்து மணிமாலைகளுடன் குளிர்ந்த திருவதனத்துடன் புன்னகை பூத்தவறு தோன்றினார்.

அவர் அந்த அபமணி முன் தன் இடது கையை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமய நிகழ்ச்சிகள்

### மணவாளக் கோல விழா இன்று

சாவகச்சேரி, செப் 9

நுணாவில் மேற்கு விளாவலி மருசடி வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தினத்தையொட்டி.இன்று புதன்கிழமை மணவாளக்கோல விழா நடைபெற இருக்கின்றது.

கூட்டுவழிபாடு, பண்ணிசை, அருள் உரைகள் ஆகியவற்றுடன் அன்னதானமும் நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றது (ஓ-31)

### சகஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 9

அராலி தெற்கு செம்பி தோட்டம் ஸ்ரீ பரமேஸ்வர ஞான வைரவ சுவாமி திருக்கோயில் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் .

பிரதம குரு பிரம்மஸ்ரீ வி இராமமூர்த்தி குருக்களும், தேவஸ்தான குரு ஸ்ரீ வி வைத்தியநாத சர்ம வும் சங்காபிஷேகத்தை நடாத்தி வைப்பர் [illegible] அன்னதானம் வழங்கப்படும். (ஓ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**Bitsmans Institutes**
MANIPAY.
பிற்மன் இலண்டன் பரீட்சைக்குரிய
சுருக்கெழுத்து, தட்டெழுத்து
**Short Hand & Type writing**
(English & Tamil)
ஆரம்பம்;- 9-9-87 Wed. 6-00

# உதயன்

09 - 09 - 1987 புதன்கிழமை

**Bitsmans Institutes**
MANIPAY.
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
★ 3 மாத பயிற்சி வகுப்புகள் ★
SPOKEN ENGLISH with GRAMMAR
ஆசிரியர்:- M. M. தேவராஜா
ஆரம்பம்;- 9-9-87 Wed. 4-30 p. m

## புளொட்டும் கண்டனம்

மட்டக்களப்பு, செப் 9 மூதூர் உதவி அரச அதிபர் ஜனாப் எம். எம். கபீட் முகமது படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து புளொட் இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இயக்கத்தின் அரசியல் பிரிவுச் செயலாளர் திரு இரா. வாசுதேவன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். (ஒ-21)

# HIGHER English Course

This course is for all those who are really keen to achieve fluency in English. The course comprises an abundant written practice, meticulous correction and short diagnostic tests conducted regularly throughout the course.

**Syllabus Include**

1. A Play by Shakespeare (in original form)
2. A Play by Benard Shaw (in original form)
3. A Novel by Charles Dickens
4. Comparative study of the works of five 20th Century Poets
5. Essay writing
6. Comprehension and Precis
7. Letter writing and Report writing
8. Idioms and Proverbs
9. Grammar Etc. Etc.

காலம்:- 4 மாதங்கள் (week ends)

ஆரம்பம்:- 19-09-87

கட்டணம் ரூ. 300/-

# கன்ரேபியா
கல்வி நிறுவனம்
13, ராசாவின் தோட்டம் லேன்,
(ஸ்ரான்லி ரோட் முடிவுக்கருகில்)
யாழ்ப்பாணம்.



இந்திய சமாதானப்படை தங்கியிருக்கும் யாழ் கோட்டைக்கு முன்னால் கடந்த திங்களன்று நடைபெற்ற வழிமறிப்புப் போரின்போது எடுக்கப்பட்ட படங்கள். [படங்கள்;- சண். ஜோன்சன்]

## நிலைமை சீரான பின்னரே நகைகள் வரும்

கொழும்பு, செப். 9 வடபகுதிப் பாதுகாப்பு பற்றி உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தான் அடகு வைக்கப்பட்ட நகைகள் கொழும்பில் இருந்து திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

மக்கள் வங்கிப் பேச்சாளர் ஒருவர் முன்சொன்னவாறு தெரிவித்தார். (உ-எ)

## இலங்கையர் சிறையில்!

வெளிநாட்டுச் சிறைகளில் 1,260 இலங்கையர் சிறைத் தண்டனை அனுபவித்துவருவதாக அறிவிக்கப்படுகின்றது.

1981 இற்கும் கடந்த மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டுக் கைதானவர்கள் என்று தெரிய வருகின்றது. (உ-எ)

## பிரபாவைக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தும் ஆயுதங்களைப் பெறுவதில் இந்திய அமைதிப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்—

- இப்படி விடுதலைப் புலிகள் வற்புறுத்தி உள்ளனர். [அ-எ]

## உங்களுக்கு வசதியாக உதயன் கருமபீடம்

**உதயன் - சஞ்சீவி**

பத்திரிகைகளின்
விளம்பரதாரர்கள்
செய்தியாளர்கள்
விநியோகஸ்தர்கள்
மற்றும் அபிமானிகளின் வசதி கருதி யாழ்-பஸ் நிலையத்துக்கு அருகே 207, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள

**ஷப்ரு நிதி நிறுவனத்தில் உதயன் கருமபீடம்**

இன்று தொடக்கம் இயங்குகிறது.

விளம்பரம் செய்ய விரும்புகிறீர்களா?

உதயன் செய்தியாளர் தந்துவிட்ட கடிதத்தை ஒப்படைக்க வேண்டுமா?

விநியோகம் சம்பந்தமாக விளக்கம் அறிய வேண்டுமா?

கைலாச பிள்ளையார் கோவிலடி அலுவலகத்துக்கு வரவேண்டும் என்பதில்லை.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் 5 விநாடிகள் நடந்து சென்று **உதயன் கருமபீடத்தில்** உங்கள் அலுவலை முடித்துக்கொள்ளலாம்.

உதயன் அலுவலகம் தூரத்தில் இருக்கிறதே என்ற சலிப்பு வேண்டாம்.

**உதயன் கருமபீடத்தில்** உங்கள் கருமங்களை சுலபமாக முடித்துக் கொள்ளலாம்.

**உதயன் கருமபீடம்**
ஷப்ரு அலுவலகம்
207, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.

## விடுதலைப் புலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சதிக் கும்பல் ஒன்றினால் ஒரு கிறிஸ்தவப் போதகரும், அவரின் மூன்று உதவியாளர்களும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நள்ளிரவுக்குக் கிட்டிய நேரத்தில் விடுதலைப் புலிகளுக்குக் குறி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்பாராத விதமாக இப்போதகர் குழு இக்கொடூரத் தாக்குதலுக்கு இரையாகியுள்ளது. ஏதுமறியா இந்த அப்பாவிகள் மீது காட்டுமிராண்டித்தனமாக மேற்கொள்ளப்பட்ட இச்சதிக்கும்பல்களின் நடவடிக்கையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், இக்கோரச் செயலுக்கு ஆளானவர்களுக்குத் தமது ஆழ்ந்த அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இருத யுகத்.-.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நீட்டினார். அதில் பல வித வண்ண நிறங்களில் இரத்தினக் கற்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. அதைக் கண்ட அவர், ''சுவாமிஜி! எனக்குப் பொன்னும் மணியும் நவரத்தினங்களும் வேண்டாம். எனது நோய் நீங்கினால் போதும்'' என்று பணிந்தார்.

பகவான் தனது வலக் கரத்தால் அப்பெண்மணியை ஆசீர்வதித்தார். மறைந்தும் விட்டார். இச்சம்பவத்தை அவள் அப்போதிருந்த ஸ்ரீ சுஜயேந்திர தீர்த்தர் எனும் மடாதிபதியிடம் கூறவே, அவர் சுவாமிகள் தரிசனங் கிடைத்திருக்கிறது இனிக் கவலை வேண்டாம் நோய்நீங்கி விட்டது என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

1671 ஆம் ஆண்டு சிராவணமாதம்கிருஷ்ண பக்ஷ குருவார உதய வேளையில் ஸ்ரீமந் நாராயணனின் உதவியால் பிருந்தாவன பிரவேசம் செய்து ஜீவ சமாதியடைந்தார். அதுவே மந்த்ராலயம். இது நடந்து இன்று 316 வருடமாகிறது. அவரது நினைவுதினத்தை ஈழத்திலும் கொண்டாடி, ஸ்ரீ ராகவேந்திரா சுவாமிகளை நினைவு கூருமுகமாக நல்லூர் கோவில் வீதியிலே மூன்று நாள் விழா நடைபெறுகின்றது.

## லலித்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பினேன்.

தார்மீக விருப்புக்கு மாறாக, நான் செய்த அரச கடமையினால் பாதிப்படைந்தேன் என்று எண்ணக்கூடியவர்கள் பற்றி நான் நினைத்தேன்.

ஒருநாள் தாராள மனப்பான்மையுடன் என்னை விளங்கிக் கொள்வார்கள் என்று நான் நம்பினேன்.

(வளரும்)

## மதகுரு. . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் உபாலி குலதுங்க. (வயது 22) இவரும் நுவரெலியா ''அசெம்பிளி ஒப் கோட்'' சபையைச் சேர்ந்தவர்.

இவர்கள் இருவரும் சில தினங்களுக்கு முன்னர் சமய ஊழியம் தொடர்பாக நுவரெலியாவில் இருந்து வானில் யாழ்ப்பாணம் வந்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ''அசெம்பிளி ஒப் கோட்'' போதகர் போல் ராஜ்ஜின் இல்லத்தில் தங்கி இருந்துவிட்டு மற்றைய இடங்களில் உள்ள ''அசெம்பிளி ஒப் கோட்'' சபைகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சமயம் இந்தப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றைய இருவரும் மானிப்பாய் ''அசெம்பிளி ஒப் கோட்'' சபையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் சேகர்டொன்பொஸ்கோ (வயது 21)

மற்றவர் பிலேந்திரன் வில்லியம் செபரத்தினம் (வயது 22)

இவர்களின் சொந்த இடம் நவாலி.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

திங்கட்கிழமை இரவு சுதுமலைச் சந்தி வில்லியம் மேதர் ஆலயத்தின் ஏழாவது ஆண்டுவிழா நடைபெற்றது. அதில் கலந்து கொண்டுவிட்டு பிரஸ்தாப சிங்கள மதகுருவும் மற்றும் ஏழு உதவியாளர்களும் வானில் மல்லாகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இவர்களின் வாகனம் உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்னால் உள்ள சந்தியில் திரும்பும் பொழுது இனந்தெரியாத முகமூடி அணிந்த துப்பாக்கி நபர்கள் வானை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர்.

இதனால் அந்த இடத்திலேயே பிரஸ்தாப நான்கு பேரும் கொல்லப்பட்டனர்.

அந்த வழியால் வந்த மற்றொரு போதகரின் உதவியுடன் இவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இறந்தவர்களின் மரண விசாரணை தெல்லிப்பளையில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயம் அடைந்தோர் விவரம் வருமாறு;

ஆர். ஏ. ஜேம்சன் (வயது 50).

என். பத்மதேவா (வயது 28)

கு. கனகராசா (ரகு) (வயது 25).

ஜே லேனாட் சத்தியகுமரன் என்பவர் காயமெதுவும் இன்றித் தப்பினார்.

தென்இலங்கை வாசிகள் இருவரின் சடலங்களும் நேற்று விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (இ-7-10)

## நாங்கள் சேர்ச் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடுவில் மகளிர் கல்லூரிச் சந்தியில் திரும்பும் போது சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

அப்பொழுது நானும் எனது மகன் சத்தியகுமாரனும் ''எம்மைச் சுடவேண்டாம் நாம் சேர்ச்காரர் என்று கத்தினோம்''

அதனைப் பொருட்படுத்தாமல் அவர்கள் சுட்டுத்தள்ளினார்கள்.

சில நிமிடங்களில் சத்தம் நின்றது காயப்பட்டவர்கள் முனகிக்கொண்டு கிடந்தனர்.

பின்னால் ஒரு ஸ்கூட்டரில் போதகர் சாம் ராஜதுரை வந்தார்.

அப்போதுதான் கவனித்தேன் இரு இயந்திரத் துப்பாக்கி ஏந்தியவர்கள் முகமூடி அணிந்தபடி அந்த இடத்தைவிட்டு ஓடினார்கள்.

ஆனால் ஆறு அல்லது ஏழு துப்பாக்கிகள் [illegible] என்று எனக்கிருந்தது.

பிறகு எமது வானின் கதவைத் திறந்து பார்த்தபோது நால்வர் இறந்து கிடந்தனர்.

இவ்வாறு அவர் கூறினார். (ஒ-7)

## பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வரியிறுப்பாளர் கவனத்திற்கு

உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய விபரங்கள் தற்போது சேகரிக்கப்படுகின்றன. இவற்றைத் தெரிவிக்கும் படிவங்கள் எம்மிடம் உள்ளன. பெறவிருப்புவோர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (வெளிமாவட்டத்தில் உள்ளவர்கள் தபாலில் பெற்றுக்கொள்ளலாம்) அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12-09-87

**பிராந்திய வரியிறுப்பாளர் சங்கம்**
(வடக்கு - கிழக்கு)
55 1/2 [illegible],
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்



நொத்தாரிசு க. சிவலிங்கம்
அவர்களின்
அரும்பெறற் புதல்வன்
**செல்வன் இளங்கோவனின்**
ஓராண்டு நிறைவு அபரக்கிரியை
**நினைவு அஞ்சலி**

09 - 09 - 1987

இளங்கோ! இளங்கோ!! எழிலார் இளங்கோ!!!
கேட்டார்ப் பிணிக்கும் கேளா ருவக்கும்
இங்கித மொழிபயில் எழிலார் இளங்கோ
எம்மிற் பிரிந்தோ ராண்டக வெய்தினும்
கண்ணினும் கருத்திலும் கலந்துருவாகி
எம்மிற் பிரியா எழிலார இளங்கோ!
தண்ணளி வதனமுந் தளிர்மலர் விழியுங்
கண்ணிய வொழுக்குங் களிபுன் னகையுங்
கொண்டே எம்மிடைக் குலவிய ஞான்றை
உன்னி யுன்னி யுளம்பரி பலத்தால்
மண்ணும் விண்ணும் வாழ்கநின் புகழென
அன்னையு மத்தனு மருமுடன் பிறப்பும்
அண்மைச் சுற்றமும் அன்பினர் வலரும்
நாண்மலரேந்தி நாடியில் வேளைநின்
ஆட்டைக் கிரியை அன்புடன் புரிகுவர்
இளங்கோ நீயும் இலங்கு பிறைகுடச
னடிமல ரிணைந்திடு கென்றே.

276, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பெற்றோரும்
சகோதரரும்

(1674)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/8. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 09-09-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 892/8 Navalar Road, Jaffna on 09 - 09 - 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org